# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C.668/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 11.02.2026.**

| | |
|---|---|
| **Name : பாவாயி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் காட்டுவளவில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் தகப்பனார் செங்கோட்டையன் ஆவார். கடந்த 08.06.2024 ம் தேதி இரவு 8 மணிக்கு என் அப்பா நடந்து கோவில் கும்பாபிஷேகத்திற்காக பனிக்கனூர் பேருந்து நிறுத்தம் அருகே சென்ற போது இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்த செல்வராஜ் என்பவர் என் மகன் மூலமாக சொல்லிவிட்டார். ஜலகண்டாபுரம் பனிக்கனூர் பேருந்து நிறுத்தம் அருகே நடந்து சென்ற போது பின்னால் வந்த இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.
2) விபத்தின் காரணமாக என் தகப்பனாருக்கு இடுப்பு, கால், கை, தலை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்று சேர்த்தோம். பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது 10.06.2024 ம் தேதி சிகிச்சை பலனின்றிஇறந்து போய்விட்டார். விபத்திற்கு இரு சக்கர வாகன ஓட்டுநர் தான் காரணம். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். பிரேத

பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நான் சம்பவம் நடந்து 1/4 மணி நேரம் கழித்து சென்றேன் என்றால் ஆமாம். நான் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். என் அப்பா தவறால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C.668/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 11.02.2026.**

| | |
|---|---|
| **Name : கண்ணன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் எத்திகுட்டைமேட்டில் குடியிருந்து தறி ஓட்டி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் பெரியப்பா செங்கோட்டையன் ஆவார். கடந்த 08.06.2024ம் தேதி இரவு 8 மணிக்கு என் பெரியப்பா நடந்து கோவில் கும்பாபிஷேகத்திற்காக பனிக்கனூர் பேருந்து நிறுத்தம் அருகே சென்ற போது இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக மாமா செல்வராஜ் என்பவர் என் மகன் மூலமாக சொல்லிவிட்டார். ஜலகண்டாபுரம் பனிக்கனூர் பேருந்து நிறுத்தம் அருகே நடந்து சென்ற போது பின்னால் வந்த இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக என் பெரியப்பாவுக்கு இடுப்பு, கால், கை, தலை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்று சேர்த்தோம். பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது 10.06.2024ம் தேதி சிகிச்சை பலனின்றிஇறந்து போய்விட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நான் மாமா செல்வராஜ் மூலம் சம்பவம் குறித்து கேட்டு தெரிந்து கொண்டேன். சம்பவம் நடந்து 1/4 மணி நேரம் கழித்து சென்றேன் என்றால் ஆமாம். நான் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். என் பெரியப்பா தவறால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No :MC 26/2023**

**Prosecution witness : எ.சா. 3** **Date : 11.02.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தோரமங்கலம் கூட்டுறவு சொசைட்டியில் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையின் பேரில் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ராஜம்மாள் பெயரில் உள்ள சேமிப்பு கணக்கு எண்.779610012630 கணக்கு பட்டியல் 29.07.2024 முதல் 02.02.2026 வரைக்கானது அது **எ.ம.சா.ஆ.17** ஆகும். மோகன்ராஜ் (எ) ராஜூ பெயரில் உள்ள தனி நபர் கடன் கணக்கு எண்.77961060500661 கணக்கு பட்டியல் 15.05.2023 முதல் 11.02.2026 வரைக்கானது அது **எ.ம.சா.ஆ.18** ஆகும். சத்திய பிரியா பெரியல் உள்ள நைக கடன் கணக்கு எண்.77961062034319 கணக்கு பட்டியல் 04.09.2025 முதல் 11.02.2026 வரைக்கானது அது **எ.ம.சா.ஆ.19** ஆகும். யார் வங்கி கணக்கு துவங்கியது என்றால் ராஜூ என்பவர் துவங்கி அவர் தான் பணம் செலுத்துகிறார் என்றால் நான் தற்போது செயலாளராக சேர்ந்ததால் அது பற்றி சொல்ல இயலாது.

**குறுக்கு விசாரணை–**

2) ராஜம்மாள் பெயரில் தோரமங்கலம் வங்கி கிளையில் வங்கி கணக்கு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் 29.07.2024ம் தேதி துவங்கப்பட்டது. வங்கியில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ராஜம்மாள் தான் வங்கி கணக்கை துவக்கினார் என்றால் அப்போது நான் இல்லை. வங்கி கணக்கில்

செலுத்தப்படும் பணத்தை ராஜம்மாள் எடுத்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். பதிவேடு கொண்டு வந்துள்ளேனா என்றால் ஆமாம். வங்கி கணக்கு ஆரம்பிக்கும் போது முன்பணமாக ரூ.3500/– செலுத்தி துவங்கப்பட்டது என்றால் ஆமாம்.

3) வங்கி கணக்கு துவங்கும் போது ரூ.500/– செலுத்தி துவங்கியதாக சொல்லப்பட்டிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். பொதுவாக ரூ.500/– கொடுத்து துவக்கமுடியுமா என்றால் முடியும். ரேகை ராஜம்மாள் என்பவருடையது தான் என்றால் கணக்கு துவங்கும் போது நான் பணியில் இல்லை. பணம் எடுக்கும் போது லட்ஜரில் கைரேகை ராஜம்மாளிடம் பெற்று தான் பணம் தருவார்கள். அந்த ரேகை ராஜம்மாள் என்பவருடையது தானா என்றால் எனக்கு தெரியாது.

4) ரேகை வாங்குவதை யார் மேற்பார்வை செய்வார்கள் என்றால் மலர்விழி என்ற எழுத்தாராவர். எத்தனை மாதங்களாக கைரேகை வைத்து பணம் வாங்கி செல்கிறார் என்றால் 1 தடவை எடுத்துள்ளார். எத்தனை மாதம் ரூ.3,000/– ராஜூ செலுத்தியுள்ளார் என்றால் ரூ.3,500/– மாதம் மாதம் செலுத்தி வருகிறார். நான்கு மாதம் ராஜூ என்பவர் செலுத்தி வருகிறார் என்றால் உதவி செயலாளர் சொல்லி தெரிந்து கொண்டேன். எனக்கு எதுவும் தெரியாது. ராஜூ என்பவர் அவர் தாயாரை அழைத்து வந்து செலுத்தி வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது.

5) கூட்டுறவு வங்கி கணக்கில் 29.07.2024 முதல் 02.02.2026 வரை பணம் செலுத்தி வருகிறார். 5 மாதமாக பணம் செலுத்தினாரா என்றால் 4 மாதம் செலுத்தி வருகிறார். அந்த பணத்தை யாராவது எடுக்கிறார்களா என்றால் ஒரு முறை ராஜம்மாள் எடுத்துள்ளார். ராஜம்மாளுக்கு வங்கி கணக்கும் கிடையாது, ரேகையும் ராஜம்மாள் என்பவரது கிடையாது என்றும் ராஜூ என்பவர் என் நண்பர் என்பதால் அவர் பணம் செலுத்தி ராஜம்மாள் எடுப்பது போன்று ரேகை வைத்து பணத்தை எடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த கைரேகை ராஜம்மாள் என்பவரது அல்ல என்றால் சரியல்ல. போலியான வங்கி கணக்கை துவக்கி

போலி கணக்கு வழக்குகளை காட்டி போலியான ஆளின் பெயரில் நடத்தியுள்ளது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**